1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

வரையறுத்த லிற்றோ காஸ் ரேமினல் லங்கா (தனியார்) கம்பனியின் (“கம்பனி”) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பட்டியல்படுத்தப்படும்.

கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், பொருத்தமானவாறு அதனை வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபையின்

அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு குழுமத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும்

பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையால் வழங்கப்பட்ட அரசு உடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான (SOEs) கூட்டு ஆளுகை மீதான வழிகாட்டல் மற்றும் செயற்பாட்டுக் கைநூல்	கைநூலின் 6.7 ஆம் பிரிவின் பிரகாரம், கமபனியானது 2024 திசெமபர் 31 இல் உள்ளவாறான ரூபா 5,795,390,925 கிரயத்திலான நிலையான சொத்துக்கள் மீதான வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.	2024 இல் முடிவடைந்த அண்டிற்கான நிலையான சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வு பக்கர் ரில்லி அன்ட் கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டது. அவர்களுடைய கள வேலையை பூர்த்தியாக்கப்பட்டு இணக்கம் செய்யும் வேலையை செய்கின்றனர். கம்பனி இறுதி அறிக்கைக்காக காத்திருக்கின்றதுடன் கணக்காய்விற்கு	கம்பனியானது SOE வழிகாட்டல் மற்றும் பொது முயற்சிகள் சுற்றறிக்கை வேண்டுகை என்பவற்றினை பின்பற்றப்பட வேண்டும்.

			விரைவில் சமர்ப்பிக்கப்படும்.	
(ஆ)	அரசு உடைமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான கூட்டு ஆளுகை மீதான வழிகாட்டலின் இணைப்பு IV	புதிய நிதிக்கூற்றுக்கள் சபை அனுமதிக்கு முன்னர் கணக்காய்வு குழுவின் (AC) நோக்கெல்லையின் கீழ் நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்கின்றது. எவ்வாறாயினும், கம்பனியானது சபை அனுமதிக்கும் முன்னரே அவர்களுடைய மீளாய்விற்கு AC இற்கு நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.	அவதானிப்புகளை முறையாக ஏற்றுக் கொள்கின்றோம். கம்பனியானது சபை அனுமதிக்கும் முன்னரே அவர்களுடைய மீளாய்விற்காக கணக்காய்வு குழுவிற்கு நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தலை ஏற்றுக் கொண்டது. இதன்படி நல்லாளுகையை பின்பற்றுவதுடன் இணங்கி இந்த நடைமுறை 2025 ஆம் ஆண்டிலிருந்து முறைப்படி பின்பற்றப் பட்டுள்ளது.	கம்பனியானது SOE வழிகாட்டல் மற்றும் பொது முயற்சிகள் சுற்றறிக்கை வேண்டுகை என்பவற்றினை பின்பற்றப்பட வேண்டும்.
(இ)	2015 மே 25 ஆந் திகதிய PED 01/2015, 2016 ஒக்தோபர் 27 ஆந் திகதிய PED 1/2015(I) மற்றும் 2022 சனவரி 14 ஆந் திகதிய PED 1/2015(ii) ஆம் இலக்கங்கள் கொண்ட பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கைகள்	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்ட பதவியை கொண்டிருந்த உத்தியோகத்தர்கள் அமர்த்தப்பட்டிருந்ததுடன் SOE எந்தவொரு HM 1-1 வகுதிக்கு சமமான அலலது மேற்பட்ட பதவியுடையவர் மாதாந்தம் 115 லீற்றர் முதல் 145 லீற்றர் வரை எரிபொருள் படியை பெறுவதற்கு தகுதியுடையவர். அந்த ஏற்பாடுகளிற்கு முரணாக 5 உத்தியோகத்தர்கள் மேற்குறிப்பிடப்பட்ட ஆகக் கூடிய எல்லையுடன் ஒப்பிடும் போது 2024 ஆம் ஆண்டிற்காக ரூபா 3,105,601 பெறுமதியான 7655 லீற்றர் மிகையான எரிபொருளை பயன்படுத்தியிருந்தனர்	உங்களுடைய வினாவில் குறிப்பிடப்பட்ட 5 உத்தியோகத்தர்கள் வேலை தரம் 05 (JG 05) ஊழியர்களாக உள்ளதுடன் மேற்குறிப்பிட்ட கம்பனியினுடைய கார் கொள்கை பிரகாரம் அந்த ஊழியர்கள் அவர்களுடைய போக்குவரத்து தேவையை செய்வதற்கு எரிபொருள் படிக்காக தகுதிபெற்றள்ளனர். கம்பனியானது கம்பனி பராமரித்த வாகனங்களை வழங்கியிருக்கவில்லை.	கம்பனியானது SOE வழிகாட்டல் மற்றும் பொது முயற்சிகள் சுற்றறிக்கை வேண்டுகை என்பவற்றினை பின்பற்றப்பட வேண்டும்.

(ஈ)	2015 மே 25 ஆந் திகதிய PED 01/2015 ஆம் இலக்க மற்றும் 2016 ஒக்தோர் 27 ஆந் திகதிய PED 01/2015(i) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைகள்	உத்தியோகபூர்வ வாகனத்திற்கு தகுதி பெற்ற உத்தியோகத்தர் அப்பதவிக்குரிய அலுவலக வாகனங்களை பயன் படுத்துவதற்கு அல்லது ரூபா 50,000 மாதாந்த போக்குவரத்து படியை பெறுவதற்கு சந்தர்ப்பம் உள்ளது. எவ்வாறாயினும் அத்தகைய உத்தியோகத்தர்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு முரணாக சாரதியை அல்லது சாரதிப் படிகளை வழங்கப்பட வேண்டியிருக்கவில்லை		
		(i) கமபனியானது ஏழு ஊழியர்களிற்கு ரூபா 201,600 முதல் ரூபா 390,360 வரையான மாதாந்த போக்குவரத்துப் படிகளையும் மூன்று ஊழியர்களிற்கு ரூபா 50,000 மாதாந்த சாரதிப் படிகளையும் 2020 ஆம் ஆண்டிலிருந்து வழங்கியிருந்தது. 2024 ஆம் ஆண்டில் மிகையாக செலுத்தப்பட்ட மொத்த தொகை ரூபா 20.8 மில்லியனாகும்.	எழுப்பப்பட்ட அவதானிப்புக்கான குறிப்புரைகளிற்காக கம்பனியானது பின்வரும் தெளிவுபடுத்தல்களை மரியாதையுடன சமர்ப்பிக்கின்றது. கம்பனி பேணப்பட்ட கம்பனி கொள்கை பிரகாரம், வாகனக் எந்தவொரு வகுதி ஊழியர்களிற்கும் வாகனங்கள் வழங்கப் பட்டிருக்கவில்லை. கம்பனி வழங்கிய சாரதி கொண்டிருக்காத உத்தியோகத்தருக்கு மாத்திரம் சாரதி படிகள் செலுத்தப்பட்டதுடன் கம்பனி வழங்கிய சாரதியை கொண்டிருப்பதற்கு தகுதியுடையவர் இது 2024 சனவரி 16 இல் நடைபெற்ற கூட்டத்தில் அனுமதிக்கப்பட்டிருந்தது	கம்பனியானது SOE வழிகாட்டல் மற்றும் பொது முயற்சிகள் சுற்றறிக்கை வேண்டுகை என்பவற்றினை பின்பற்றப்பட வேண்டும்.

		(ii) கம்பனியானது 2020 ஆம் ஆண்டிலிருந்து வாகனப் படிகள் பெறுவதற்கு தகுதியற்ற பத்து ஊழியர்களிற்கு ரூபா 21,600 முதல் ரூபா 77,220 வரை மாதாநத போக்குவரத்துப் படிகளை வழங்கியிருந்தது. 2024 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட மொத்த படிகள் ரூபா 7.8 மில்லியனாகும்.	எழுப்பப்ட்ட அவதானிப்புக்கான குறிப்புரைகளிற்காக கம்பனியானது பின்வரும் தெளிவுபடுத்தல்களை மரியாதையுடன சமர்ப்பிக்கின்றது. கம்பனி பேணப்பட்ட கம்பனி கொள்கை பிரகாரம், வாகனக் எந்தவொரு வகுதி ஊழியர்களிற்கும் வாகனங்கள் வழங்கப் பட்டிருக்கவில்லை. கம்பனி வழங்கிய சாரதி கொண்டிருக்காத உத்தியோகத்தருக்கு மாத்திரம் லைசாரதி படிகள் செலுத்தப் பட்டதுடன் கம்பனி வழங்கிய சாரதியை கொண்டிருப்பதற்கு தகுதியுடையவர் இது 2024 சனவரி 16 இல் நடைபெற்ற கூட்டத்தில் அனுமதிக்கப்பட்டிருந்தது	கம்பனியானது SOE வழிகாட்டல் மற்றும் பொது முயற்சிகள் சுற்றறிக்கை வேண்டுகை என்பவற்றினை பின்பற்றப்பட வேண்டும்.
(உ)	2015 மே 25 ஆந் திகதிய PED 2/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை	உத்தியோகபூர்வ இல்லங்களிற்காக பெறப்படுகின்ற உபகரணங்கள் மற்றும் உபபாகங்கள், தொலைபேசி, தனிப்பட்ட மொபைல் போன்கள் அல்லது இன்ரநெட் வசதிகள் கொள்வனவு செய்கின்ற கிரயங்கள் தனிப்பட்ட ரீதியில் உத்தியோகத்தரால் இறுக்கப்பட வேண்டும். அத்தகைய உபகரணங்களிற்கான செலவினம் உரிய தொழில் முயற்சிகளால் மீளளிக்க வேண்டியதில்லை. எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட சுற்றிக்கைக்கு முரணாக 2024 ஆம் ஆண்டில் மொபைல் போன்கள் வாங்குவதற்கு ஆறு	மொபைல் போன்கள் அவர்களுடைய பணியின் அடிப்படையில் அலுவலக பயன்பாட்டிற்காக குறிப்பிட்ட உத்தி யோகத்தர்களிற்கு வழங்கப்பட்டது. போன்கள் அன்றோட் அல்லது IOS கருவிகளாக இருக்க வேண்டியதுடன். திருத்தங்கள் நிகழும் போது பயன்படுத்தப் படுவதுடன் கடமையற்ற நேரங்களின் பொது நிறுத்திவைக்க அனுமதிக்கப்பட்டது. மொபைல் போன்கள் வழங்குவதற்கான தீர்மானம் பணிப்பாளர் சபையால் செய்யப் பட்டதுடன் மூல விலப்பட்டியல் களஞ்சிய காப்பாளரால் வைத்திருக்கப்பட்டது. ஒட்டு மொத்த தொடர்பாடல் செலவினை	கம்பனியானது SOE வழிகாட்டல் மற்றும் பொது முயற்சிகள் சுற்றறிக்கை வேண்டுகை என்பவற்றினை பின்பற்றப்பட வேண்டும்.

		உத்தியோகத்தர்களிற்கு ரூபா 440,241 ஆன தொகையை கம்பனி செலுத்தியிருந்தது.	குறைக்கின்ற தொலைபேசி செலவினங்களை சரிசெய்யும் டயலொக் அக்சிற்றா PLC இடமிருந்து மொபைல் போன்கள் பெறப்பட்டது.	
(ஊ)	2024 திசெம்பர் 23 ஆந் திகதிய PED 03/2024 ஆம் இலக்க போது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை	சுற்றறிக்கையின் 1.2(II) ஆம் பந்தியின் பிரகாரம், வர்த்தக செயற்பாடுகள், நியதிச் சட்டச் சபைகள் மற்றும் அரச உடமை யாக்கப்பட்ட கம்பனிகள் 2023 ஆம் ஆண்டின் போது உழைத்த இலாபங்கள் மேற்குறித சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு முரணாக ஒரு ஊழியரிற்கு ரூபா 20,000 வீதம் மிகையூதியத்தை பரிந்துரைக்க முடியும். கம்பனியானது ஆண்டு இறுதியில் ஊழியர் ஒருவரிற்கு ரூபா 100,000 மிகயூதியத்தை இலாபத்தில். ஆண்டிறுதியில் செய்யப்பட்டது. பொது திறைசேரியின அனுமதியில்லாமல் 2024 சனவரியில் சராசரி செயலாற்றலிற்கு மேல் ரூபா 685,767 செலுத்தப்பட்டது. ரூபா 860,000 மொத்த தொகை இலாப மிகையாக ஆண்டு இறுதியின் போது அனுமதிக்கப்பட்டிருந்தது	எதிர்வு கூறல் திட்டம், வருடாந்த பாதீடு உள்ளடங்கலாக ஐந்து ஆண்டு காலப் பகுதிக்கான உபாயத் த்திட்டம சபையால' அனுமதிக்கபடப்டிருந்ததுட ன் 2023 மார்ச 14 ஆந் திகதிய பொது முயற்சிகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.. திணைக்கள ரீதியான இலக்குகள், இலக்குகளை அடைகின்ற திணைக்களத் தலைவர் மேவுகின்ற திட்டம் தனிப்பட்ட ஒருவரி மீளாய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் மதிப்பாய்வு தரங்களின் அடிப்படையில் செலுத்தப்பட்டது. மிளையூதிய கொடுப்பனவுகள் பணிப்பாளர் சபையால" அனுமதிக்கப்பட்டதுடன் கம்பனி வருமானம் மற்றும் நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டது.	கம்பனியானது SOE வழிகாட்டல் மற்றும் பொது முயற்சிகள் சுற்றறிக்கை வேண்டுகை என்பவற்றினை பின்பற்றப்பட வேண்டும். .

1.6. வரிப்பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
2023 மார்ச் 29 ஆந் திகதிய SEC/2023/E/01 ஆம் சுற்றறிக்கை மற்றும் 2023 ஏப்ரல் 06 ஆந் திகதி SEC/2023/E/02 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயக சுற்றறிக்கை பிரகாரம் முற்பன தனிப்பட்ட வருமான வரி (APTT) கணிப்பிடும் போது	தேசிய கணக்காய்வு அலுவலகத்தினுடைய முன்னைய அவதானிப்புக்களிற்கான பதிலில் முகாமைத்துவம் அத்தகைய கழிப்பனவுகளிற்காக பொருத்தமுடைய ஊழியர்களிற்காக 2025 ஏப்ரல் 01 இலிருந்து எரிபொருள் படிகள் மீது APPTT கழிப்பனவை	கம்பனியானது IRD சுற்றறிக்கைகளுடன் இணங்கியெபழுக வேண்டும்.

கம்பனியானது மீளாய்வாண்டில் 8 ஊழியர்களிற்காக ரூபா 8,054,660 ஆன தொகை 2023 ஆம் ஆண்டின் போது 8 ஊழியர்களிற்காக வழங்கப்பட்ட ரூபா 7,212,221 மொத்தமான எரிபொருள் படி கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	அமுலாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இது கடமை தொடர்பான வேலைகளிற்காக எரிபொருள் பயன்படுத்தும் ஊழியர் மீது கடுமையாக பின்பற்றப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், எரிபொருள் கிரய மீளளிப்புகளை மாத்திரம் செய்துள்ளது.

2. நிதி மீளாய்வு

2.1 நிதிசார் விளைவகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,060.4 மில்லியன் வரிக்கு முன்னரான இலாபமாக இருந்ததுடன் நேரொத்த முன்னைய ஆண்டிலுள்ள இலாபம் ரூபா 2,161.3 மில்லியனாகும். ஆகவே, நிதிசார் விளைவுகளில் ரூபா 100.9 மில்லியன் தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் ரூபா 210.9 மில்லியனால் தேறிய நிதி வருமான வீழ்ச்சியே இந்த வீழ்ச்சிக்கான பிரதான காரணமாக உள்ளது.

2.2. பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கின் பகுப்பாய்வு

அதிகரிப்பு அல்லது வீழ்ச்சியின் சதவீதங்களுடன் முன்னைய இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடப்பட்ட மீளாய்வாண்டின் பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் பகுப்பாய்வு பின்வருமாறு உள்ளன.

	தொகை ரூபா மில்லியன்			**சதவீத மாற்றம்**		
திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது	**2024**	**2023**	**2022**	**2024**	**2023**	**2022**
வாடிக்கையாளர் ஒப்பந்தங்ளிலிருந்தான வருமானம்	2,018	1,999	1,444	0.9%	38.4%	-10.6%
விற்பனை கிரயங்கள்	256	319	319	-19.7%	-	1%
மொத்த இலாபம்	1,762	1,679	1,124	4.9%	49.3%	-13.4%
செயற்பாடுகளிலிருந்தான இலாபம் ∴ (நட்டம்)	1,279	1,169	656	9.4%	78.2%	-29%
நிதி வருமானம்	785	994	520	-21%	91.1%	71%
நிதிச் செலவினம்	4.5	2.7	17.2	66.6%	-84.3%	-38.5%
வருமான வரிச் செலவினம்	620	620	577	-	7.4%	380%
ஆண்டிற்கான இலாபம்	1,439	1,540	582	-6.5%	164%	-46%

2.3. விகிதப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்ட மீளாய்வாண்டிற்கான பிரதான விகிதங்கள் பின்வருமாறு உள்ளன.

விகிதங்கள்	**2024**	**2023**	**2022**
இலாபதன்மை விகிதங்கள்			
மொத்த இலாப வீதம்	87%	83.9%	77.8%
தேறிய இலாப வீதம் (PBT)	102%	108%	80%
தேறிய இலாப வீதம் (PAT)	71.3%	77%	40%
ஈடுபடுத்திய மூலதன வருவாய் வீதம் (ROCE)	14.6%	16%	9.60%
உரிமை மூலதன வருமாய்	10.8%	12.15%	4.7%
சொத்துக்கள் மீதான வருவாய் (தடவைகள்)	13.8%	14.78%	8.49%
திரவத்தன்மை விகிதங்கள்			
நடைமுறை விகிதம் (தடவைகள்)	8.85	5.60	1.14
விரைவு விகிதம் (தடவைகள்)	8.84	5.59	1.13
அந்நிய செலவாணி விகிதங்கள்			
வட்டி மேவுகை விகிதம்	447.67	794.04	66.16
வினைத்திறன் விகிதங்கள்			
சொத்து சுழற்சி (தடவைகள்)	13.55%	13.67%	10.42%
சந்தை பெறுமதி விகிதம்			
ஒரு பங்கிற்கான உழைப்புகள்	9.07	9.71	3.67
ஒரு பங்கிற்கான புத்தக பெறுமதி	83.45	79.90	77.07

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1. முகாமைத்துவ திறமையீனங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ) திரவ பெற்றோலிய காஸ் ஒரு மெற்றிக் தொன் கையாளலின் பிரகாரம் துறைமுக அகற்றல் கட்டணத்தின் பரமாற்றத்தில் வரையறுத்த லிற்றோ காஜட லங்கா கம்பனியின் (LGLL) அதன் சகோதரி கம்பனி மூலம் விநியோகிப்பதற்காக LPG களஞ்சிய வசதி மற்றும் LPG நிரப்புதல் வசதி என்பன வழங்குவதே கமபனியின் நோக்கமாக உள்ளது. எவ்வாறாயினும், கம்பனியானது வழங்கப்பட்ட சேவைகளின் நிபந்தனை மற்றும் விதி முறைகள் நிர்ணயிப்பதற்கு LGLL உடன் முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.	கம்பனியானது இலங்கை அரசாங்கத்தின் சுவீகரிப்பின் பின்னர் வரையறுத்த செல் காஸ் லங்கா கம்பனிக்கும் வரையறுத்த செல் ரேமினல் லங்கா (தன்யார்) கம்பனக்கும் இடையிலான செயற்திறனான உடன்படிக்கையின் கீழ் செயற்படுகின்றது. சந்தை நிபந்தனைகளின் அடிப்படையில் உடன்படிக்கை காலரீதியாக திருத்தப்பட்டிருந்தது. கம்பனியானது தற்போதைய நிறுவன பெயரின் கீழ் உடன்படிக்கையை மீள நிறைவேற்றுவதற்கு திறந்முள்ளது.	கம்பனியானது வழங்கப்பட்ட சேவைகளின் நிபந்தனை மற்றும் விதி முறைகள் நிர்ணயிப்பதற்கு LGLL உடன் முறையான உடன்படிக்கை கைச்சாத்திடபடபட வேண்டும்.

3.2. செயற்பாட்டுத் திறமையீனங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
கம்பனியானது 10 ஆண்டு காலப் பகுதிக்காக ஹம்பாந்தோட்டை துறைமுக வளவிற்குள் LPG இறக்கல் மற்றும் களஞ்சிப்படுத்தல் வசதி உன்பன குத்தகைக்கு பெறுவதற்கு 2013 நவம்பர் 20 இல் இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்தது. ரூபா 668.55 மில்லியன் தொகையான 8 ஆண்டுகளிற்காக உடன்பட்ட குத்தகை வாடகை (வரிகள் உள்ளடங்க) செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 233.84 மில்லியன் தொகையான (வரிகள் உள்ளடங்க) இரண்டு ஆண்டுகளிற்கான உடன்பட்ட குத்தகை வாடகை 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுதத வேண்டியதாக இருந்தது. இந்த ரேமினல் 2,700 மெற்றிக் தொன் LPG களஞ்சிய இயலளவை கொண்டிருந்தது.	கம்பனியானது 10 ஆண்டு காலப்பகுதிக்காக ஹம்பாந்தோட்டை துறைமுக வளவிற்குள் LPG இறக்கல் மற்றும் களஞ்சிப்படுத்தல் வசதி என்பன குத்தகைக்கு பெறுவதற்கு 2013 இல் SLPA உடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்தது. கம்பனியானது 2021 பெப்ரவரியில் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டமையால் செலுத்தப்படாதிருந்த ரூபா 668.55 மில்லியன் மற்றும் ரூபா. 233.84 மில்லியன் செலுத்தியிருந்தது. HIPG தவறை குறைகூற முயன்று தவறியிருந்தது ஆனால் மீளளிப்ப கோரிக்கைகள் தவற விடப்பட்டது. அந்த வசதி	முறையான தீர்மானம் பெறுவதற்கு சபையின் தீர்மானம் எடுப்பதற்கு செலுத்தப்படாத குத்தகை வாடகை மற்றும் உடன்படிக்கைகள் தொடர்பான தகவல்கள் முன்வைக்கப்பட வேண்டும்.

எவ்வாறாயினும் கம்பனியானது 2021 பெப்ரவரி 11 இல் ஹம்பாந்தோட்டை நிரப்புதல் திட்ட செயற்பாடுகளை நிறுத்துவதற்கு தீர்மானித்தது. LPG 10,075 உடன்பட்ட அளவுடன் 06 கப்பல்கள் மாத்திரம் 2013 நவம்பர் 20 இலிருந்து 2021 பெப்ரவரி 11 வரை இநத ரேமினல் முழுவதும் கையாளப்பட்டது என அவதானிக்கப்பட்டது. ஆகவே, செல்லப்பட்ட வசதி 8 ஆண்டு காலத்திற்கான முதலீகளுடன் ஒப்பிடும் போது கம்பனியால் முழுமையாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	குத்தகை காலாவதியாவதில் HIPG இற்கு திம்ப கையளித்திருந்தது. முழுமையாக செலுத்தப்படாத குத்தகை தொகை 2024 இல் செய்யப்பட்டது.	

3.3. பயன்படுத்தப்படாத அல்லது குறைவாக பயன்படுத்திய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
ஒக்சசிசன் நிரப்புதல் நிலையம் நிர்மாண நோக்கத்திற்காக மற்றும் / அல்லது மேலதிக LPG செயற்பாடு மற்றும் களஞ்சிய விரிவாக்கல் செயற்திட்டம் அல்லது ஏதாவது தொடரபுபட்ட நடவடிக்கைகள் என்பவற்றிற்கு பயன்படுத்தவதற் ஹெரவெலபிட்டியாவில் 22 ஏக்கர் காணி மற்றும் கட்டிடங்களிற்காக மொத்த குத்தகை வாடகையின் பகுதியாக 2021 இல் இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 500 மில்லியன் செலுத்தியிருந்தது. எவ்வாறாயினும், கம்பனியின் மீளமைப்பு செயற்பாடு காரணமாக மீளாய்வாண்டு வரை கம்பனிக்கு மேற்குறித்த காணியை குத்தகைக்கு விடுவதற்கு இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியிருக்கவில்லை. ஆகவே, கம்பனியானது தற்போது வரை மேற்குறித்த கொடுப்பனவிலிருந்து எவ்வித நன்மைகளும் பெற்றிருக்கவில்லை. குறைவாக பயன்படுத்திய காணியின் சந்தர்ப்ப கிரயம் நிலைபேறாக இருக்க முடியும். ரூபா 143,000,000 அண்ணளவில் முதலீட்டு பெறுகைகளின் திரண்ட இழப்பு	2021 இல் கம்பனியானது ஹெரவெலபிட்டியாவில் 22 ஏக்கர் காணி மற்றும் கட்டிடங்களிற்காக மொத்த குத்தகை வாடகையின் பகுதியாக இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு (SLLDC) ரூபா 500 மில்லியன் செலுத்தியிருந்தது. நிரப்புதல் நிலையம் கட்டுவதற்கு அல்லது LPG செயற்பாட்டு விரிவாக்கம் என்பன ஆரம்ப நோக்கமாக உள்ளது. எவ்வாறாயினும், தொற்று நோய் நிலைபெற்றதால் திட்டத்திற்கான அவசரம் குறைந்தது. கம்பனியானது முற்பணக் கொடுப்பனவு உள்ளடங்க 2025 சனவரியல SLLDC இற்கு 50 ஆண்டு குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திட்டது. அனுமதி நிலுவையில் உள்ளமை மற்றும் விருத்தி செய்யப்படாத ஆதனம் என்பன காரணமாக தகராறு கம்பனியானது வேலை நடைபெறுகின்ற கட்டிடத்தை பயன்படுத்தவதால் செலவினங்களை சேமிப்பில் விளைந்தது. அந்த முற்பண சந்தர்ப்ப கிரயம் பொதுத் துறைக்குள் இருந்தது.	கம்பனியானது உரிய அதிகாரிகளின் அனுமதியுடன் குறித்த நோக்கங்கள் அல்லது ஏதாவது பொருத்தமான நோக்கங்களிற்காக இந்த ஆதனத்தை பயன்படுத்தப்பட வேண்டும். •

(திறைசேரி உண்டியல் வீத அடிப்படையில்) மற்றும் நிதி விகதங்கள் மீதான எதிர்மறைத் தாக்கம் என்பன மதிப்பிடப்பட்டது.

3.4. கொள்வனவு முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் 2006 இன் 4.2.2 மற்றும் 4.2.3 ஆம் வழிகாட்டலில் குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தலிற்கமைய கொள்வனவு நிறுவனம் பிரதான கொள்னவு திட்டம் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட கொள்வனவு திட்டத்திற்கான விரிவான கொள்வனவு திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன் கொள்வனவு கால அட்டவணையும் அதன் தொடக்கத்திலிருந்து பூர்த்தியாக்கும் வரை ஒவ்வொரு தனிப்பட்ட கொள்வனவு நடவடிக்கையும் நடவடிககை எடுக்கும் நோக்கில் தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், கம்பனியானது மீளாய்வாண்டின் போது ரூபா 148.1 மில்லியன் பெறுமதியான 05 கொள்வனவு நடவடிக்கைகளிற்காக சொல்லப்பட்ட கொள்வனவு திட்டங்களை கொள்வனவு காலப் பட்டியலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	முகாதைத்துவ கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.	கம்பனியானது ஒவ்வொரு கொன்வனவு துறையினதும் நடவடிக்கைகளின் படி முறைகளை விவரிக்கின்ற நோக்கில் கால வரிகைக்கபடி கொள்வனவு கால அட்டவணை தயாரிக்கப்பட வேண்டும்.

3.5. மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ) 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் குழுவால் வழங்கப்பட்ட அரசு உடமையாக்கப்பபட்ட முயற்சிகளிற்கான (SOEs) செயற்பாட்டுக் கைநூலின் 3.1 மற்றும் 3.2(i) ஆம் பிரிவுகளின் பிரகாரம் கம்பனியானது அவர்களுடைய ஆளணி, ஆட்சேர்ப்புத் திட்டம் (SOR) மற்றும் வேதனங்களிற்காக பொது திறைசேரியின் அனுமதி பெற்றிருக்கவில்லை.	வரையறுத்த லற்றொ காஸ் ரேமினல் லங்கா கம்பனியானது (LGTLL) அரசுடமையாக்கப்பபட்ட முயற்சிகளிற்கான செயற்பாட்டுக் கைநூலின் பிரகாரம் அதன் ஆளணிக்காக அனுமதிக்கு பொது ஆளனி திட்டத்திற்காக (SOR) திறைசேரியிடமிருந்து விலக்கழிப்பு பெற்றிருந்தது. கம்பனியானது முகாமைத்துவ திணைக்களத்திற்கு உரிய விபரங்களை சமர்ப்பித்திருந்ததுடன் தற்போது பொது திறைசேரியிடமிருந்து ஆளணி அனுமதிகளை பெறுகின்றது. 2024 சனவரி 16 இல் சம்பள மீளமைப்பிற்காக	கம்பனி சுற்றறிக்கையின் வேண்டுகைகளை பின்பற்றப்பட வெண்டும். ஏனென்றால் தொகுதிக்கும் கம்பனிக்கும் இடையில் துணைநிலை கொள்கை எதுவும் இருக்கவில்லை.

	சபை அனுமதி வழங்கப்பட்டிருந்தது.	
(ஆ) 2022 ஒக்தோபர் 06 ஆந் திகதிய 06/2022 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் சகல ஊழியர்களும் 60 வயதினை அடையயும் பொது ஓய்வுபெற முடியும். எவ்வாறாயினும் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களிற்கு முரணாக 2024 ஒக்தோபரில் 60 வயதினை அடைந்திருந்த HRM கிளை தலைவர் ஒப்பந்த அடிப்படையில் 2025 யூலை 31 வரையும் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தார்.	சகல லிற்றோ காஸ் உத்தியோகததர்களும் 60 வயதில் ஓய்வு பெறுகின்றனர் இருக்கின்ற அவர்களின் ஆரம்ப ஒப்பந்தம் 60 வயதின் பின்னர் அவர்கள் சேவையை தொடர முடியும். கம்பனியானது திறைசேரி மற்றும் ளுழுநுசுரு என்பவற்றின் கடிதங்களின் உதவியுடன் சேவையை தொடர்சியாக வேலைக்கமர்த்த புதிய நிலையான நிபந்தனை ஒப்பந்தங்களை வழங்கியிருந்தது. ஆட்சேர்ப்பக்கு சபை அனுமதி வேண்டப்பட்டுள்ளது.	கம்பனியானது SOE வழிகாட்டல் மற்றும் பொது முயற்சிகள் சுற்றறிக்கை என்பவற்றினை பின்பற்றப்பட வேண்டும்.

4. கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 ஆண்டறிக்கை

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
கைநூலின் 6.6 ஆம் பிரிவிற்கமைய கம்பனியின் ஆண்டறிக்கை நிதியாண்டு முடிவடைந்த பின்னர் ஐந்து மாதங்களிற்குள் (5) பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் வரைவு ஆண்டறிக்கை நிதியாண்டு முடிவடைந்த பின்னர் அறுபது (60) நாட்களிற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கையளிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், கம்பனியானது 2023 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்காததுடன் நிதிக் கூற்றுக்களுட்ன் சேர்த்து 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த வரைவு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	கம்பனியின் 2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை SLIC மற்றும் நிதி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும். 2024 ஆம் ஆண்டிற்கான வரைவு கணக்குகள் 2025 ஏப்ரல் 11 இல் அரச கணககாய்வாளர்கறிககு சமர்ப்பிக்கப்பட்டது.	கம்பனியானது SOE வழிகாட்டல் மற்றும் பொது முயற்சிகள் சுற்றறிக்கை என்பவற்றினை பின்பற்றப்பட வேண்டும்.

4.2. கணக்காய்வு குழு

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	கூட்டு ஆளுகையின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வுக் குழு குறைந்தது மூன்று மாதங்களிற்கு ஒரு தடவையாவது கூட்டப்பட்டு விரைவில் சபைக்கு அதன் பரிந்துரை அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதன்பின்னர் எடுக்கின்ற சரியான அளவீடுகளிற்கு வசதியளிப்பதற்கு கூட்டக் குறிப்பகளுடன் சேர்த்து விரைவில் சபைக்கு அதன் பரிந்துரையை அறிக்கையிடப்பட வேண்டும் எவ்வாறாயினும் 2024 ஆம் அண்டின் போது இரண்டு குழுக் கூட்டங்கள் மாத்திரமே நடைபெற்றிருந்தது.	அவதானிப்புகள் ஏற்றுக் கொள்ள்பபட்டது. கம்பனியானது கைநூலின் 4.2 ஆம் பிரிவின் கீழான வேண்டுகையை கவனத்திற்கு எடுத்திருந்தது. இதன்படி, குறைந்தது நான்கு கணக்காய்வு குழுவின் கூட்டங்கள் நிர்ணயிக்கப்பட்ட நியமங்களுடன் இணங்குகையில் இரண்டு கம்பனிகளிற்காகவும் 2025 ஆம் ஆண்டின் பொது நடை பெற்றதை உறுதிப்படுத்துவதற்கு திட்டமொன்றை கொண்டிருந்தது.	கம்பனியானது SOE வழிகாட்டல் மற்றும் பொது முயற்சிகள் சுற்றறிக்கை என்பவற்றினை பின்பற்றப்பட வேண்டும்.
(ஆ)	கூட்டு ஆளுகை கைநூலின் 4.2(i) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு குழுவானது கணக்காய்வு குழுச் சாசனம் இன்மையால் பின்னிணைப்பு IV இல் உள்ள சாசன மாதிரி சபை அனுமதியுடன் பின்பற்றப்பட வேண்டும். எவ்வாறாயினும், கணக்காய்வு குழு சாசனம் விருத்தி செய்யப்பட்டு அல்லது மாதிரி சாசனம் சபை அனுமதியுடன் பின்பற்றப்பட்டு இருந்ததென அவதானிக்கப்பட்டது.	கம்பனியானது அவதானிப்புகள் ஏற்றுக் கொள்ள்பபட்டது. தற்பொது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு சாசனம் தயாரிக்கப்படுகின்றதுடன் விவைில் இறுதியாக்கப்படும். பூர்த்தியாக்கும் பொது கைநூலின் 4.2(i) ஆம் பிரிவின் வேண்டுகையுடன் இணங்குவதை உறுதிப்படுத்தவதற்கும் ஆளுகை கட்டமைப்பு மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு சூழலை வலுப்படுத்தவதற்கும் இது சபை அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படும்.	கம்பனியானது SOE வழிகாட்டல் மற்றும் பொது முயற்சிகள் சுற்றறிக்கை என்பவற்றினை பின்பற்றப்பட வேண்டும்.